Dr. H. V. HANDE : May I know the number of employees who are now out of job on account of this closure and whether Government have taken any steps to rehabilitate at least a few of them and give them preferential treatment in certain other employment which Government is likely to have in their employment agencies? Will the Government categorically tell us the probable date on which this factory is likely to be opened ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1,200 தொழிலாளர்கள் என்று என்னிடத்தில் தகவல் இருக்கின்றது. இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். வேலை அற்ற தொழிலாளர்களுக்கு மூடிக்கிடக்கின்ற காலத்திலே என்ன செய்ய வேண்டும் என்பது புதிய பிரச்சினை. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கத்தின் தொழிலாளர் துறையும் இதுபற்றி பரிசீலித்து வருகின்றன. எப்போது திறக்கப்படும் என்று கேட்டார்கள். எவ்வளவு விரைவாக திறக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக திறக்க முயற்சி எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 21, 22, 41, 42 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

High School building at Bhavani

* 43 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the construction of the Government High School buildings at Bhavani, at Coimbatore District has been aken up by the Public Works Department?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பவானி அரசினர் (கழக) பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு இப்போது இருக்கும் கட்டிடத்தின் மேல், முதல் மாடி கட்டிடம் கட்ட வரைப்படமும், மதிப்பீடும் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து அரசாங்கத்தின் ஒப்பளிப்புக்கு வந்துள்ளன. இது பரிசீலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : எவ்வளவு தொகைக்கு மதிப்பீடு வந்திருக்கிறது, கட்டிடம், எப்போது கட்டி முடிக்கப்படும் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஏற்கனவே பெண்கள் அரசினர் பள்ளியில் ஒரு அறிவியல் ஆய்வுக் கூடக் கட்டிடம் ஏற்கனவே எழுப்பப்பட்டுவிட்டது. மேல் மாடிக் கட்டிடத்திற்கு ரூ. 34,700 செலவில் வரைப்படமும், மதிப்பீடும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. நிதித் துறைக்கும், பொதுப்பணித் துறைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒப்புதல் வந்ததற்குப் பிறகு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

Municipal High Schools in Madurai

*44. Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether it is a fact that most of the Municipal High Schools in Madurai are without basic amenities like black boards, wooden partitions between class rooms or clocks?

1970 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லே.

திரு. கே. விநயகம் : முனிசிபல் நிர்வாகத்திலே, போதுமான அளவுக்கு பணவசதி இல்லாத காரணத்தாலே, அதற்குத் தரப்பட வேண்டிய சலுகைகள் தரப்படவில்லே. ஒவ்வொரு வகுப்பறைக்கும் நடுவில் ஒரு "பார்ட்டிஷன்" இருக்க வேண்டுமென்றும், பள்ளிகள் பெண்களும், பிள்ளேகளும் ஒதுங்குவதற்கு வேறு இடம் இருக்க வேண்டுமென்றும் என்றெல்லாம் நிர்வாகக் குறிப்பிலே, கமிஷனர் ரிப்போர்ட்டிலே, வந்து இருப்பது உண்மையா? அல்லது அமைச்சரவர்கள் இப்போது பதில் சொன்னர்களே எந்தவிதமான குறைபாடுகளும் இல்லே என்று, இது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது அப்படி இல்லேயா என்று கேட்டார்கள். இல்லே என்று சொன்னேன். இப்போது 12 பள்ளிகள் இருக்கின்றன. அதற்கு சாமான்கள் வாங்க, பல்வேறு மேஜை நாற்காலி வாங்குவதற்கு 1,30,000 ரூபாய்க்கு ஆர்டர் வழங்கப்பட்டிருக்கிறது. 76,463 ரூபாய் களுக்கு சாமான்கள் வந்து சேர்ந்துவிட்டன. பிற சாமான்களும் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

Reclamation of ayacut lands under Parambikulam Aliyar Project

* 45 Q.—DR. H. V. HANDE : Will the Hon the Minister for Agriculture and Harijan Welfare be plased to state—

(a) whether there is any scheme for reclamation of ayacut lands under the Parambikulam-Aliyar project ;

(b) if so, the area of the lands proposed to the reclaimed ;

(c) whether any loans would be distributed to the farmers in the area; and

(d) the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பகுதியின்கீழ் நிலங் களேப் பண்படுத்துதலுக்கான திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத் தில் பொள்ளாச்சி, உடுமலேப்பேட்டை, தாராபுரம், பல்லடம் வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) ஆம்.

(எ) அப்பகுதியிலுள்ள விவசாயிகள் பராதீனம் செய்வதற்கும் அடைமானம் வைப்பதற்கும், தங்களுக்கு உரிமையுள்ள தங்களது நிலங்களே அடைமானம் வைப்பதன் மீது ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 600 வரை அவர்களுக்குக் கடன் வழங்கப்படும். பணியை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றத்தையொட்டி இக்கடன்களேத் தவணேகளில் வழங்கப்படும். இதற்கென செலுத்தத் தக்க வட்டி வீதம் 7¾ சதவீதமாகும். முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் சேரும் வட்டித் தொகை இரண்டாவது ஆண்டின் இறுதியில் வசூலிக்கப்படும். கடன் தொகை மூன்ருவது ஆண்டிலிருந்து 8 சம தவணேகளில்